## <u>சேலம், தொழிலாளர் இணை ஆணையரின் செயல்முறை ஆணைகள்</u>

பிறப்பிப்பவர்: எல்.ரமேஷ், பி.ஏ., பி.எல்.,

<u>சுருக்கம்</u>

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு தொழிலாளர் அமைச்சுப்பணி – தீபா.(திருமதி).த, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம் – இளநிலை உதவியாளர் பதவியில் 03.02.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைத்து – உத்தரவிடப்படுகிறது.

---

அ1/ 2924 /2021

நாள். .07.2021

படிக்கப்பட்டது.

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.20.09.2007.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.7027/PSD-B2/2010, நாள்.18.12.2012.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.5178/PSD-C1/2013, நாள்.31.07.2013.
5. சென்னை, தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/54048/2013–IX, நாள்.28.01.2014.
6. தமிழ்நாடு மாநில அளவிலான கூராய்வுக்குழு – III செயல்முறை ஆணைகள் எண்.1758/CV-5/2014–8, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.05.02.2020.
7. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.4872/PSD-H1/2013, நாள்.16.04.2021.
8. சென்னை, தொழிலாள. ஆணையரின் குறிப்பாணை எண்.ஜி3/54048/2013, நாள்.28.06.2021.

*******

ஆணை:

பார்வை–4இல் கண்டுள்ள அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதம் மூலம் திருமதி.த.தீபா அவர்களை (பதிவு எண்.17146156) தொழிலாளர் துறையில் இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தனியரின் சாதிச்சான்றிதழை உறுதி செய்யுமாறு மாநில கண்காணிப்பு குழுவிடம் (State level Scrutiny committee) கோரப்பட்டு, அதனடிப்படையில் பார்வை–6இல் கண்டுள்ள செயல்முறை ஆணையில் திருமதி.த.தீபா அவர்கள் மாநில அளவிலான கூராய்வு குழு – III, முன் 28.01.2020 அன்று ஆஜராகி அவர் அளித்துள்ள ஆவணங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் மற்றும் காவல் துறை அறிக்கை ஆகியவற்றினை ஆய்வு செய்து தனியர் பழங்குடியினர் இன மலையாளி வகுப்பினை சார்ந்தவர் என முடிவு செய்து தனியருக்கு சேலம், வருவாய் கோட்டாட்சியர் வழங்கிய சாதிச்சான்றிதழ் எண்.111751 மற்றும் கடித எண்.நி.மு/8461/2002(A4), நாள்.15.11.2002 உண்மையானது என உறுதி செய்து ஆணை வழங்கப்படுள்ளது.

பார்வை–4இல் கண்டுள்ள கடிதத்தின்படி திருமதி.த.தீபா அவர்கள் சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை–5இல் கண்டுள்ள சென்னை, தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணைகளின் படி சேலம், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகளின் கீழான பொது விதி 10(ஏ)(1)–இன் படி பணியமர்த்தப்பட்டு 03.02.2014 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை–8இல் கண்டுள்ள சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணையில் பார்வை–7இல் கண்டுள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் மூலம் தனியரின் பணியினை, அரசுப்பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதால் தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக அரசுப்பணியில் சேர்ந்த நாளான 03.02.2014 முதல் பணிவரன்முறை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரது பணிப்பதிவேடு பரிசிலனை செய்யப்பட்டதில், தனியரது ஓராண்டு பணிக்காலத்தில் முறையற்ற விடுப்பு ஏதும் துய்க்கவில்லை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என அறிய வருகிறது.

பார்வை–8இல் படிக்கப்பட்ட சென்னை, தொழிலாளர் ஆணையர் அறிவுரைகளின்படி இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 03.02.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது. எனவே, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a) (i) மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32–இன் கீழ் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும், பார்வை–5இல் படிக்கப்பட்ட சென்னை, தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 34–இன் படி பணிவரன்முறை செய்த நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி தேர்விலும் தேர்ச்சிப்பெற வேண்டுமெனவும், அடுத்த பதவி உயர்விற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம் – 1 மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வத்துறை தேர்வு பகுதி – அ மற்றும் ஆ–வில் தேர்ச்சிப்பெற வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

தொழிலாளர் இணை ஆணையர்,
சேலம்.

30/07/21

30/7/21

<u>பெறுநர்</u>
திருமதி.த.தீபா,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

நகல்
பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத்தொகுப்பு

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது</u>
1) தொழிலாளர் ஆணையர், சென்னை.
2) கூடுதல் தொழிலாளர் ஆணையர், கோவை.